[1994 ஏப்ரல் 20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கருவூல விதிகளின்படி ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடத்திலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டும். அதன்படி புதிய வட்டம் ஒன்றை ஏற்படுத்தும்போது வட்டத் தலைமையிடங்களில் துணைக் கருவூலம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் அரசு ஆராய்ந்ததில் காவிரிப்பட்டினம், கிருஷ்ணகிரி தாலுக்காவுக்குட்பட்ட ஒரு பேரூராட்சியாகும். எனவே அவ்விடத்தில் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

308–

இராமநாதபுரம் தொகுதி, கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***25691**—திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிறுவாகனங்கள் கூட இயக்க இயலாதபடி சாலை அமைந்துள்ளதால் கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்த இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)